Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 29 5-1985 புதன்கிழமை (வைகாசி 16 நம்மாண் 8) முழக்கம் 113

## பிரிட்டனிலிருந்து பத்து தமிழர் திருப்பி அனுப்பப்படவில்லை!

(லண்டன்)

பிரிட்டன் சென்றுள்ள பத்து இலங்கைத் தமிழர்களைத் திருப்பியனுப்புவதென்ற முடிவை, அகதிகள் பராமரிப்பு இயக்கங்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், வந்தேறு குடியேற்ற அதிகாரிகளும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு கடைசி நேரத்தில் ஒத்தி வைத்தது. இப் பத்து இளைஞர்களும் நேற்று கொழும்பிற்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட இருந்தார்கள். இவர்களுக்கு இலங்கையில் எவ்வித ஆபத்தும் ஏற்படாது என்று இலங்கை அரசு உறுதியளித்திருந்ததாகவும் பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு நேற்று அறிவித்திருந்தது.

# இலங்கைப் பிரச்சினைபற்றி ராஜீவுடன் பேச அமெரிக்காவின் அரசியல் தலைவர்கள் ஆர்வம்!

(வாஷிங்டன்)

பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியின் அடுத்த மாத அமெரிக்கப் பயணத்தின்போது வாஷிங்டனில் இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக அவருடன் ஆலோசனை நடத்த பிரபல அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள்.

நாடாளுமன்ற வெளியுறவுக் குழுவின் தலைவர், ஆசிய பசுபிக் விவகாரத் துணைக் குழுவின் தலைவர் உட்பட பலர் பிரதமருடன் ஆலோசனை நடத்தி இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் நிலையைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆர்வமுடன் இருப்பதாகக் கூறினார்கள்.

அதேவேளையில், இலங்கையின் இனப்பிரச்சினை பற்றியும், இவ்விவகாரத்திற்கு நிரந்தரமான அரசியல் தீர்வு காண்பதற்கு பாரதம் எடுத்துவரும் முயற்சிகள் பற்றியும் பிரதமர் ராஜீவ் காந்தி, அமெரிக்க ஜனாதிபதி றெகனல்ட் றீகனிடம் எடுத்துக் கூறுவார் என்று இந்திய வெளியுறவு அமைச்சுச் செயலகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க செனட் சபை உறுப்பினர்களுக்கும் பாரதக் குழு இது பற்றி விளக்கும்.

# ஜே. ஆர் - ராஜீவ் உச்சிமகாநாடு கேரளாவில் திங்கள் நடைபெறும்?

## இரு தினங்கள் தங்கியிருந்து பேசுவதற்கு நடவடிக்கை

(புதுடில்லி)

இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும், பாரதப் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையிலான உச்சிமாநாடு ஜூன் மாதம் மூன்றும் திகதி திங்கட்கிழமை நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக புதுடில்லிக்கு கொழும்பிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன:

அதே வேளையில், இரு தலைவர்களுக்குமிடையிலான சந்திப்பு புதுடில்லியில் இடம் பெறுமென்றும். கேரளாவில் நடைபெறுவதற்கு ஏற்பாடு

—4ஆம் பக்கம் பார்க்க

## அமிர், சிவா, சம்பந்தன் டில்லியில் பார்த்தசாரதியுடன் முக்கிய பேச்சு

(புதுடில்லி)

கூட்டணித் தலைவர்கள் மு. சிவசிதம்பரம், அ. அமிர்தலிங்கம், இரா. சம்பந்தன் ஆகிய மூவரும் அவசரம் அவசரமாக புதுடில்லிக்கு நேற்று முன்தினம் அழைக்கப்பட்டனர்.

முதலில் அங்கு சென்ற திரு சிவசிதம்பரம், வெளியுறவுச் செயலர் திரு ரமேஷ் பண்டாரியுடன் முக்கிய விடயங்கள் பற்றி அவர் கொழும்புக்குப் புறப்படுவதற்கு முன்னர் உரையாடினர்.

கூட்டணித் தலைவர்கள் மூவரும் பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆலோசனையின் பேரில் நேற்று இருதடவைகள் பாரத வெளியுறவுக் கொள்கைக் குழுத் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதியுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

வெளியுறவு அமைச்சர் குர்ஷித் ஆலம்கானுடனும் இவர்கள் மூவரும் நேரில் பேசினர்.

இனப் பிரச்சினைக்கு முக்கியமான தீர்வொன்றைக் காண்பதற்காக ரமேஷ் பண்டாரி புதுடில்லி திரும்பும் வரை இவர்கள் மூவரும் அங்கு தங்கியிருக்கலாமென்று தெரியவந்துள்ளது.

## நான்கு இயக்கத் தலைவர் கூட்டம்

(சென்னை)

ஈழ தேசிய விடுதலை முன்னணி என்ற பெயரில் இணைந்துள்ள நான்கு முக்கிய தீவிரவாத இயக்கங்களின் தலைவர்களும் சென்னையில் நேற்றுக் கூடி ஆலோசனை நடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்திக்க இந்தியா செல்லவுள்ளது பற்றி ஆராயவே இத்தலைவர்கள் நேற்று கூடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ராஜீவின் முக்கிய செய்தியுடன் நேற்று மாலை பண்டாரி வந்து சேர்ந்தார்!

பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேஷ செய்தியுடன், வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரி விசேஷ விமானம் மூலம் நேற்று மாலை கொழும்பு வந்து சேர்ந்தார்.

இன்று காலை ஜனாதிபதியைச் சந்தித்து ராஜீவின் கடிதத்தை அவர் கையளிப்பார். இன்று பிரதமர் பிரேமதாசா, அமைச்சர்கள் லலித் அத்துலத்முதலி, ஏ. சி. எஸ். ஹமீது, எஸ். தொண்டமான், கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வம், திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரைச் சந்திக்கவிருக்கும் திரு. பண்டாரி, நாளை காலை இங்கிருந்து புறப்படலாமெனத் தெரியவருகிறது.

இலங்கை அரசு விரும்பினால் மேலும் ஓரிரு தினங்கள் அவர் இங்கு தங்கக் கூடும். திரு. ரமேஷ் பண்டாரியுடன் உதவிச் செயலாளர் தேவஸாம் வந்திருக்கிறார்.

## 3 லொறிகள் தீக்கிரை

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற மூன்று லொறிகள், அனுராதபுரம்

—4–ஆம் பக்கம் பார்க்க

## இருவர் தீமூட்டி எரிப்பு

பஸ் ஒன்றில் பயணம் செய்த இருவர், அனுராதபுரம் - புத்தளம் வீதியில், கலாவேவ என்ற இடத்தில் பஸ்ஸால் இறக்கப்பட்டு எரிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. வீதியிலுள்ள பாலமொன்றிற்கு அருகில் இச்சம்பவம் நடைபெற்றது.

## யாழ். கோட்டைக்குள்ளிருந்த காணிப் பதிவக உறுதிகள் செயலகத்துக்குச் சென்றன

(அரியாலை)

யாழ்ப்பாணம் கோட்டைக்குள் கடந்த சில மாதங்களாக வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் காணிப் பதிவகத்தின் உறுதிகளும், இணைப்பிரதிகளும் நேற்று அங்கிருந்து பாதுகாப்புக் கருதி எடுக்கப்பட்டன.

—4ஆம் பக்கம் பார்க்க

## ஞாயிறு, திங்கள் இரவுகளில் லட்சக் கணக்கில் கொள்ளை

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் கடந்த ஞாயிறு, திங்கள் ஆகிய இரு தினங்களிலும் அடுத்தடுத்து நடைபெற்ற இரண்டு கொள்ளைகளினால் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

–4ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்கா இலங்கை அரசிடம் கேட்கிறது: பொறியியலாளரை பொலிஸ் சுட்டதற்கு உத்தியோக விசாரணை நடத்த வேண்டும்!

இம்மாதம் 23ம் திகதி இரவு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னால் வைத்து அமெரிக்க பொறியியலாளரை பொலிஸார் சுட்டுக் காயப்படுத்தியது தொடர்பாக உத்தியோகபூர்வ விசாரணை நடத்தப்படவேண்டுமென்று அமெரிக்க அரசாங்கம், இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்திக் கேட்டுள்ளது.

தமது காரில் பயணம் செய்து கொண்டிருந்தபோது பொலிஸார் சுட்டதினால் மத்தியு பிளாக்சுஸன்ட் என்ற அமெரிக்க பொறியியலாளர் தமது வலது கண்ணை இழக்க நேர்ந்துள்ளதாக அமெரிக்க அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

- 4ஆம் பக்கம் பார்க்க

## இன்று முதல் வழமைபோல குடாநாட்டு பஸ் சேவைகள்

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு நேற்று மாலை டீசல் வந்ததனால் குடாநாட்டு பஸ் சேவைகளும், தூர இடங்களுக்கான பஸ் சேவைகளும் மீண்டும் இன்று முதல் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலைசேவைகளும் நடைபெறும்.

இதேவேளை யாழ்—பலாலி வீதியில இன்று முதல் வேலதிக

—4ஆம் பக்கம் பார்க்க

## தீவுப்பகுதி மாணவருக்கு

# படகுச்சேவை இன்மையால் இலவச பிஸ்கட்டும் இல்லை

(புங்குடுதீவு)

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு பாடசாலைகளில் கல்வி பயிலும் சிறுவர்களுக்கு இம்முறை 'பெயர்' விசுக்கோத்துக்கள் கிடைக்கவில்லை.

பெயர்விசுக்கோத்துப்பொதிகளைப் பிரஸ்தாப இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு எடுத்துச் சென்று ஒப்படைப்பதற்குப் படகுச் சேவைகள் இல்லாமையே இதற்குக் காரணமாகும். இதனால் இப் பகுதிச் சிறுவர்கள் மிகுந்த ஏமாற்றத்துக்குள்ளாகியுள்ளனர்.

''குமுதினி'' படகில் நிகழ்ந்த படுகொலைகளைத் தொடர்ந்து இப்பகுதிப் படகுச் சேவைகள் ஸ்தம்பித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## நினைவு மண்டபம்

(அரியாலை)

அரியாலை தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு பகுதியை அமரர் அ. விஸ்வநாதனின் நினைவு மண்டபமாகத் தொழிலாளர்களும், ஊழியர்களும் தீர்மானித்துச் செயற்பட்டதைத் தொடர்ந்து, யாழ். கூட்டுறவு மேலதிக பரிசோதகர் திரு. ஆ. அந்தோனிப்பிள்ளையால் அந் நினைவு மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. இவ் வைபவத்தில் சங்கத் தலைவரின் அரிய சேவையை அவர் பாராட்டி உரையாற்றினார்.

## நிதி ஒதுக்கீடு

(சித்தன்கேணி)

பண்டத்தரிப்பு உப-அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பொதுசன நூலகத் திருத்த வேலைகள் கொள்வனவு செய்வதற்காக பதினோராயிரம் ரூபாவை யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை வழங்கியுள்ளது.

இப்பணத்திற்கு சமய, இலக்கிய நூல்கள் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பாடசாலை அபிவிருத்தி சபை

(மிருசுவில்)

மிருசுவில் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையின் அபிவிருத்திச் சபைத் தெரிவு அண்மையில் பாடசாலை அதிபர் திருமதி மில்ரட் யோசேப் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திருமதி மில்ரட் யோசேப், உபதலைவர்: திருமதி மெனிக்கா, செயலாளர்: திருமதி மரியானந்தராசா, பொருளாளர்: திருமதி இலஞ்சநாயகம், ஒன்பது பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## குரும்பசிட்டி வைபவத்தில் பேச்சு:

# 'வலது குறைந்தோர் வாழ்வு சிறப்புப் பெற உதவுவோம்'

(பலாலி)

''இலங்கையின் தலைசிறந்த சமூகசேவகியும், முன்னைநாள் அமைச்சர் மு. திருச்செல்வத்தின் பாரியாருமாகிய திருமதி. புனிதம் திருச்செல்வத்தின் நினைவுதினம் குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் எளிமையான முறையில் கொண்டாடப்பட்டது.

வலது குறைந்தோர் புனர்வாழ்வுக்காக அயராது உழைத்த அன்னாரின் நினைவு தினத்தை முன்விட்டு செவிப்புலனையும் பேசும் திறனையும் இழந்தவர்களான அண்மையில் திருமணம் செய்து கொண்ட திரு. கு. தம்பிப்பிள்ளை திருமதி. கலாநிதி தம்பிப்பிள்ளை தம்பதிகளை உபசரித்து கௌரவிக்கும் பொருட்டு தேநீர் விருந்து நடைபெற்றது. மேற்படி வைபவம் புனிதம் வலது குறைந்தோர் புனர்வாழ்வு இயக்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி விழாவுக்குத் தலைமை வகித்த சட்டத்தரணி திரு. க. வே. மகாதேவன் தனது தலைமை உரையில், 'திருமதி.புனிதம்திருச்செல்வம் சாதி இன, மத வேறுபாடு இன்றி உடல் ஊனமுற்றோர் அனைவரினதும் நல்வாழ்வுக்கும் புனர்வாழ்வுக்கும் தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். அன்னாரது புனிதமான தன்னலமற்ற சேவையினால் எத்தனையோ விழிப்புலன் அற்றவர்கள் பல்கலைக்கழகம் வரை உயர் கல்வியைப் பயின்று தங்கள் வாழ்வை வளம் பெறச் செய்துள்ளார்கள்,'' என்று கூறினார்.

இலக்கண வித்தகர் திரு. இ. நமசிவாயம் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் திருமதி. புனிதம் திருச்செல்வம் அவர்களின் சேவை புனிதமானதென்றும் அன்னாரை நினைவு கூருவதன்மூலம் மக்கள் மனதில் வலது குறைந்தோர் நல்வாழ்வுக்கான சேவை புரியும் மனப்பக்குவம் உருவாக வழிவகுக்கும் என்றார். மற்றும் பலரும் பேசினர்.




✲ சரணவாய் வடக்கு சிவலிங்கம் சிவராணியின் புதல்வன் துவாரகன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✲ அரியாலை மேற்கு தேவகுணராசா சரோஜினி தம்பதிகளின் மகள் அனிதா இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ ஆனைக்கோட்டை ஜெகநாதன் மேரி எலிசபெத் தம்பதிகளின் மகன் சிந்துஜா இன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✲ காங்கேசன்துறை சிதம்பரநாதன் சுசிலா தம்பதிகளின் மகன் ரஜனி இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✲ ஆனைக்கோட்டை குருஸ் மதவடியைச் சேர்ந்த இரத்தினம் பொன்னம்மா தம்பதிகளின் மகள் சிவமாலா தனது பிறந்தநாளை இன்று கொண்டாடுகிறார்.

# இந்து மதகுருமார் சங்கம் வேலணையில் உதயமானது

(அரியாலை)

தீவுப்பகுதியைச் சேர்ந்த அந்தணர்கள் ஒன்று சேர்ந்து வேலணை முருகன் ஆலயத்தில் இந்து மத குருமார் சங்கம் என்னும் அமைப்பினை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

சமூக அளவில் இன்றைய நிலையில் ஏனைய மன்றங்கள் அமைப்புக்கள் போல அந்தணர்களும் முன்னின்று நொந்து போனவர்களுக்கு உதவி செய்யவும் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளில் ஏனைய மதத் தலைவர்களைப் போலத் தங்கள் பங்களிப்பைச் செய்யவும், அந்தணர்களை ஒன்றிணைக்கும் நோக்கத்தையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்தணர்களின் கல்வி அறிவை மேம்படுத்தல், ஒழுக்க வழிநின்று கடமையாற்ற சிறுவர்களை வழிநடத்தல், வளர்ந்து வரும் அந்தணர்கள் வேதம், ஆகமத்துடன் சோதிடம், புராணம் படித்துச் சமய வளர்ச்சிக்காகச் செயற்படுத்தும் வகையில் வழிப்படுத்துவதும் இதன் ஆரம்ப நோக்கங்களாக இருக்கும்.

இச்சங்கத்தின் தலைவராகப் புங்குடுதீவு பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்களும், செயலாளராக இரா. ஸ்ரீதரக் குருக்களும் தெரிவு செய்யப்பட்டு 9பேர் கொண்ட நிருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

விரைவில் இச்சங்கம் எல்லா அந்தணர்களுடனும், ஏனைய சங்கங்களுடனும் தொடர்பு கொண்டு பொதுவான ஒரு சங்கமாக நிறுவப்படுவதற்கு முயற்சிகளைச் செய்து வருகிறது.

## மீண்டும் தெரிவு

(அரியாலை)

அரியாலை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகத் திரு. த. சிவலிங்கம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 1981-ம் ஆண்டு தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட இவர் தொடர்ந்தும் அப்பதவியில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## இப்படி ஒரு கொள்ளை

(ஓட்டுசுட்டான்)

சமளங்குளம் அமெரிக்கன் தமிழ்க்கலவன் பாடசாலைக்குச் சென்ற இனந்தெரியாத சிலர், அப்பாடசாலைக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சைக்கிளை எடுத்துச் சென்றுள்ளனர். இதுபற்றி புகார் செய்யப்பட்டுள்ளது.

## உயிர்ப்பிச்சை அளித்ததாம் கதறல்

(மருதங்கேணி)

ஆழியவளையைப் பிறப்பிடமாகக் கொண்டு சுண்டிக்குளப்பகுதியில் தமது தொழிலை மேற்கொண்டிருந்த அ. வல்லிபுரம், இ. கணேசலிங்கம் என்ற இரு மீனவர்களுக்கும் உண்டான நிலை அனுபவம் குறித்து அவர்கள் 'ஈழமுரசு'க்கு விபரித்தனர்.

சுண்டிக்குளத்தில் வைத்துப் பிடிக்கப்பட்ட படகுடன் பூநகரிதொடுவாய் வரை இழுத்துச் செல்லப்பட்ட அவர்கள் பரிதாபமாகக் கதறியதையடுத்து துரத்தி விடப்பட்டனராம்.

அந்நேரம் தாங்கள் பிரார்த்திக்காத தெய்வங்கள் இல்லை என்றும் அவர்கள் கூறினர்.

# சிறுவயதிலிருந்து ஒழுக்கம் நற்பழக்கம் கற்கவேண்டும்

(நல்லூர்)

''சிறு வயது தொடக்கம் பிள்ளைகள் ஒழுக்கத்தையும், நற்பழக்கங்களையும் கற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு சிறந்த கல்வியும் போதிக்கப்பட வேண்டும். இன்றைய இளஞ்சிறார்களே எதிர்கால சந்ததிகளாவர். இவர்கள் சமுதாயத்தில் சிறந்து விளங்க பெற்றோர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும் வழி காட்டிகளாக இருக்க வேண்டும்.''

இவ்வாறு அரியாலை மேற்கு காந்தி சன சமூக நிலைய சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிக்குத் தலைமை வகித்த நிலையத் தலைவர் திரு எஸ். பொன்னுத்துரை குறிப்பிட்டார்.

பொதுச் செயலாளர் திரு. எஸ். பி. ஜீவானந்தம் வரவேற்புரை நிகழ்த்துகையில் யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. ஸ்தாபனத்தால் இச் சிறுவர் பாடசாலைக்கு பால்மாவும், ஊட்டச்சத்துள்ள பிஸ்கட்டுகளும் வழங்கப்பட்டு வருகின்றன; இதனால் பாடசாலை நன்கு வளர்ச்சியடைந்து வருகிறது. வை. எம். சி. ஏ. ஸ்தாபனத்தின் இந்த அளப்பரிய உதவியினால் பிள்ளைகளின் வரவும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது மகிழ்ச்சிக்குரியதாகும் என்று குறிப்பிட்டார்.

போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை நிலையத் தலைவர் திரு. எஸ். பொன்னுத்துரையும், மாதர் சங்கத் தலைவி திருமதி நவரத்தினமும் வழங்கினர். பாடசாலை ஆசிரியை செல்வி உதயகலா கணபதிப்பிள்ளை நன்றி கூறினார்.

## தேங்காய் விலை வீழ்ச்சி

(மிருசுவில்)

தென்மராட்சிப் பகுதியில் தற்போது தேங்காயின் விலையில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கொடிகாமம் சந்தையில் தேங்காய் ஒன்றின் சராசரி விலை ஒருரூபா இருபத்தைந்து சதமாகக் காணப்படுகின்றது.

இவ் விலை வீழ்ச்சியினால் தேங்காய் விற்பனையை தொழிலாகக் கொண்டிருந்தோர் உரிய வருமானம் பெறமுடியாத நிலை தோன்றியுள்ளது.

இப்பகுதிகளிலுள்ளதென்னை மரங்களில் தற்போதைய காலநிலையில் அதிக தேங்காய் காய்ப்பதே இவ் விலைவீழ்ச்சிக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

## வரி விளம்பரம்

### பையன்கள் இருவர் தேவை

சில்லறைக் கடைக்கு, வயதெல்லை 10—14, 16—22, தகுதிக்கேற்ப ஊதியம், உணவு, போக்குவரத்து, தங்குமிட வசதி. உடன் தொடர்பு கொள்ள: பண்டிதன் புத்தகசாலை, சுண்டுக்குளிச் சந்தி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

குராவத்தை மயிலங்காட்டு வீதியில் சந்தைக்கருகாமையில் நாலு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள:- நா. செல்வரெட்ணம், ஏழாலைமேற்கு, ஏழாலை.


# Eurolanka Travels Ltd.

40, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(குறிப்பு: யாழ். பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளைக்கு அருகாமையில் உள்ள வீதியில்)

## இங்கிலாந்து /பேர்லின் சேவைகள்

**இங்கிலாந்து**

ஒவ்வொரு செவ்வாய் / வியாழன் / சனிக்கிழமைகளில் பயணம் செய்வதற்கு ஆசனப் பதிவுகளும் டிக்கட்டுக்களும் எடுத்துக் கொடுக்கப்படும் (RETURN TICKET உட்பட)

**கட்டணம்: ரூபா 19,000/-**

**பேர்லின்**

பாங்கொக் (BANGKOK) ஊடாக AEROFLOT விமானத்தில் விசேஷ சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(i) ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் பயணம் செய்யலாம்,

(ii) மே (May) 27, யூன் (June) 3,10,17 ஆம் திகதிகளில் பயணம் மேற்கொள்ள உடன் தொடர்பு கொள்ளவும்.

**கட்டணம்: ரூபா 15,500/-**

(iii) பேர்லின் போகும் பிரயாணிகளுடன் எமது பிரதிநிதி ஒருவர் எமது தலைமைக் காரியாலயத்தில் இருந்து பாங்கொக் (BANGKOK) வரையுஞ்சென்று AEROFLOT இல் பயணம் அனுப்பும் வரை எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பார்.

காசோலைகள் (Travellers Cheques) இலவசமாக எல்லா நாடுகளுக்கும் எடுத்துக் கொடுக்கப்படும் ஏனைய பிறநாடுகளுக்கு செல்ல விரும்புவோருக்கும் ஆசனப்பதிவுகளும் டிக்கட்டுக்களும் செய்து கொடுக்கப்படும்.

தலைமை அலுவலகம்:

**EUROLANKA TRAVELS LTD.**
6A, DAISY VILLA AVENUE,
COLOMBO - 4.

தொலைபேசி: 585990, 589992

(குறிப்பு: பம்பலப்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக)

கிளை
INTERLINK TRAVEL (LANKA) LTD.
37, QUEEN STREET,
COLOMBO-1

தொலைபேசி: 547131, 547132.

உதய சிந்தனை
இதயபூர்வமான நேர்மையே மானிடப் பண்பாகும்.
-- ஆங்கிலப் பழமொழி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

29-5-1985 புதன்கிழமை (குரோதன வைகாசி 16)

## சுபநேரம் மீண்டும் கருக்கூட்டுகின்றது

இலங்கை ஜனாதிபதி உச்சிமகாநாடொன்றுக்காக இந்தியாவுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கும் வேளையில், இந்திய வெளியுறவுச் செயலர் ரமேஷ் பண்டாரியின் திடீர் இலங்கை விஜயம் நொந்து போயிருக்கும் தமிழ் மக்களுக்கு சிறிது நம்பிக்கையை ஊட்ட ஆரம்பித்துள்ளது.

பல்லாண்டுகளாக பேச்சுவார்த்தைகளையே நம்பி வாழ்ந்து வரும் தமிழினம், தொடர்ந்தும் இந்திய தரப்புப் பேச்சுவார்த்தைகளிலேயே தனது ஆயுளை ஒப்படைத்துவிட்டுக் காத்திருக்கின்றது.

மார்ச் கடைசி வாரத்தில் இங்கு வந்துபோன பண்டாரி, தொடர்ந்து என்ன நடவடிக்கைகளை எடுத்தார்; என்ன ஆலோசனைகளை வழங்கினார்; என்ன திட்டங்களைத் தயாரித்தார் என்பது மூடு மந்திரமாகவே இருந்துவந்தது.

ஆனாலும், இரு நாட்டுத் தலைவர்களுக்குமிடையிலான உச்சி மகாநாடு பற்றி அன்று முதலே பேச்சுகள் அடிபட்டன.

அனுராதபுரம் சம்பவங்களுக்குப் பின்னர் இனப்பிரச்சினை விவகாரம் திடீரென சூடுபிடிக்கத் தொடங்கியது.

இந்தியாவைத் தூக்கி எறிந்து பேசிவந்த மகா சங்கத்தினரும், மகரகம பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவும் கூட ''இந்தியாவின் உதவியைப் பெற்று இனப்பிரச்சினையைத் தீருங்கள்'' என்று பகிரங்கமாக அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இந்தியாவின் உதவியின்றி இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியாதென்று ஆரம்பம் முதலே கூறிவந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, அனுரா பண்டாரநாயக்கா, சரத் முத்தட்டுவேகம, லக்ஷ்மன் ஜெயக்கொடி போன்றோர் தமது கருத்தை மீண்டும் வலியுறுத்தத் தொடங்கினர்.

''இந்தியாவுக்கு அடிபணிய மாட்டோம், முடிந்தால் படையெடுத்துப் பார்க்கட்டும்'' என்று சவால்விட்டவர்கள் பெட்டிப் பாம்பாக மாறினர்.

மற்றுமொரு அனுராதபுரம் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர், பாரதத்தின் உதவியுடன் ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பது இப்போது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

வல்வெட்டித்துறை, நெடுந்தீவு, கல்முனை, திருமலை, அனுராதபுரம் ஆகிய இடங்களில் இடம்பெற்ற இனப்படுகொலைகளுக்கு உலக நாடுகள் அளித்த பிரசாரமும் இங்கு ஏற்பட்ட மனமாற்றத்துக்கு ஒரு காரணமாக அமையலாம்.

ஈழத் தமிழ் இளைஞர்களை தாராளமாக லண்டன் வருவதற்கு பிரிட்டன் அரசு வழங்கியுள்ள 'கடைக்கண் சலுகை' கூட இலங்கை ஆட்சியாளரின் திடீர் மாற்றத்துக்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

ஜனாதிபதி — ராஜீவ் சந்திப்புக்கு முன்னர், பண்டாரி இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இறுதி வடிவம் தயாரிக்கும் முயற்சியாகவே இங்கு வந்துள்ளார்.

அவரது திட்டம் எவ்வாறானதாக அமையுமென்பது, தமிழர்களின் பிரதான கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

ரமேஷ் பண்டாரி இங்கு வருவதற்கு முன்னர் கூட்டணித் தலைவர் திரு. சிவசிதம்பரத்தை தனிமையில் சந்தித்து, இனப் பிரச்சினைத் தீர்வுக்கான ஆலோசனைகள் பற்றிப் பேசியுள்ளார்.

பண்டாரி கூட்டணித் தலைவரைச் சந்தித்தது இதுவே முதற் தடவையாதலால், பிரச்சினைக்கான தீர்வு முக்கியமான திருப்புமுனையில் இருப்பதாக கருதக் கூடியதாக இருக்கின்றது.

மீண்டும் பேச்சுவார்த்தைகள் என்று காலத்தைக் கடத்துவதில் இனிப் பிரயோசனமில்லை.

எடுக்கவேண்டிய முடிவுகளைத் தாமதமின்றி எடுப்பதன் மூலமே பிரச்சினையைத் தீர்க்க முடியுமென்பது கடந்தகாலம் புகட்டிய போதனையாகும்.

''தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்களுடன், தமிழர் விடுதலை இயக்கங்களை எந்தப் பிளவுக்கும் உட்படுத்த இடமளிக்காத வகையில் சரியான நிலை உருவாக்கப்படவேண்டும்'' என்று திரு. அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டியதை ஆட்சியாளர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், சகல தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ளும் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும்.

பண்டாரியின் தற்போதைய விஜயம் இதனை மனதிற்கொண்டு, தீர்க்கமான ஒரு முடிவை எய்தவேண்டும் என்பதே அனைவரதும் பேரவா!

# வளைகுடாப்போர்: தணிவின்றி மீண்டும் உக்கிர நிலையில்!

(லண்டன்)

வளைகுடாப்போர் ஆறுவாரங்கள் தணிந்திருந்து இப்போது மீண்டும் உக்கிர நிலையை அடைந்துள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது. ஈரானியப் போர் விமானங்கள் ஈராக்கிய பட்டினங்கள் மீது குண்டுத் தாக்குதல்கள் நடத்தியதாக இராணுவ அறிக்கைகள் தெரிவித்த போதிலும் எப்பகுதிகளில் அத்தாக்குதல்கள் இடம்பெற்றன? சேதங்கள் என்ன? என்பன குறித்து எவ்விதத் தகவல்களும் வெளியிடப்படவில்லை இதேவேளை ஈராக்கியப் போர் விமானங்களும் ஈரானின் மூன்று நகரங்கள் மீது போர் விமானத் தாக்குதல்கள் நடத்தியதாகவும் தெஹ்ரான் அறிக்கைகள் தெரிவித்தன. இக் கடுஞ்சமரில் அறுவர் கொல்லப்பட்டதாகவும் இருபது பேர் காயமடைந்ததாகவும் பிந்திக்கிடைத்த தகவல்கள் கூறுகின்றன.

இது இவ்வாறு இருக்க, போர் நிறுத்தத்துக்கு ஈரான் செவிசாய்க்காததால், தான் போரை நீடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாயிற்று என்று ஈராக் தெரிவித்துள்ளது.

ஈராக்கின் பொருளாதார, இராணுவ இலக்குகள் மீது ஈரானியப் படைகள் தாக்குதல்கள் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வளைகுடாப் போரின் இப் புதிய நிலைப்பாடு ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலாளர் திரு. பெரஸ்டி குவெல்லரின் கவனத்தையும் பெரிதும் ஈர்த்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## இறந்தோர் 25 ஆயிரமாக உயர்வு

## பங்களாதேஷுக்கு பாரதம் உட்பட பல நாடுகள் உதவி

(டாக்கா)

நெஞ்சை வெடித்திடச் செய்யும் தன்மையினதான பங்களாதேஷ் கோரச் சூறாவளியாலும், கடல் பேரலைகளின் எழுகையினாலும் இறந்தோர் தொகை இருபத்து ஐயாயிரம் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

நாற்பத்து ஐயாயிரம் பேரைக் காணவில்லை என்றும் மூன்று இலட்சம் பேர் வீடுகளை இழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அனர்த்தநிலை குறித்து ஆராயும் பொருட்டு ஜனாதிபதி எர்ஷாத் அமைச்சரவையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டினார்.

பாரதம் உணவுப் பொருட்களையும் மருந்துகளையும் வைத்தியர்களையும் அவசர அவசரமாக அனுப்பி வைத்துள்ளது. பங்களாதேஷில் விளைந்த விபரீதம் குறித்துப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி தனிப்பட்ட முறையிலும் நாட்டு மக்கள் சார்பிலும் ஜனாதிபதி எர்ஷாத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் ஐம்பதாயிரம் ஸ்டேர்லிங்கை பங்களாதேஷ் நிவாரணப் பணிக்கென அன்பளிப்புச் செய்துள்ளது.

அமெரிக்காவும், மேற்கு ஜெர்மனியும் கூட நிவாரண உதவிகளைப் பங்களாதேஷுக்கு வழங்கியுள்ளன.

## ஷியா விஜயம்

(கராச்சி)

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல்-ஹக் ஐக்கிய அரபு எமிரேற்ஸுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அவர் அபுதாபிக்கும், டுபாய்க்கும் செல்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இருநாள் விஜயம்

துணை ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் இருநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வியாழக்கிழமை தமிழகம் வருகிறார்.

## குவைத் அமீர் நீண்ட ஆயுள் பெற ஜெயில்சிங் வாழ்த்து

(புதுடில்லி)

குவைத் அமீரைக் கொலை செய்ய முயன்ற சம்பவம் குறித்து ஜனாதிபதி திரு. ஜெயில்சிங் அமீருக்குச் செய்தி ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார். தெய்வாதீனமாக அமீர் தப்பித்துக்கொண்டது குறித்து ஜனாதிபதி தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

நீண்ட ஆயுளுடன் அமீர் வாழவும் ஜனாதிபதி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க, அமீர் கொலை முயற்சியையடுத்து பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஒன்றினைக் கொண்டுவர குவைத் அரசு எண்ணியுள்ளதாக நேற்று வெளியான தகவல் ஒன்று தெரிவித்தது.

## நிலைமை சீராகிறது

(புதுடில்லி)

குஜராத்தில் நிலைமை இப்போது மாமூலாகி வருவதாக நேற்று அறிவிக்கப்பட்டது. கடந்த இருபத்து நான்கு மணித்தியாலங்களில் இரு சிறு சம்பவங்களே நிகழ்ந்துள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

தாழ்த்தப்பட்டோருக்கு அளிக்கப்பட்ட இடஒதுக்கீட்டை எதிர்த்து இங்கு உயர் சாதியினர் ஆர்ப்பாட்டம் செய்ததால் பல வாரங்களாக கலவரம் நீடித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## படகு கவிழ்ந்து முப்பது பேர் நீரில் மூழ்கி மாண்டனர்!

(புதுடில்லி)

மத்தியப் பிரதேஷில் உண்டான படகு விபத்து ஒன்றில் முப்பது பயணிகள் நீரில் மூழ்கி மரணமாகினர்.

அறுபது பயணிகள் பயணம் செய்ததாகவும் இப்படகில் வந்தோரில் பதினாறு பேர் காப்பாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய பயணிகள் பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

## தமிழ்நாடு முன்னோடி

(சென்னை)

பாரதத்தில் குடிசை மாற்று வாரியச் செயற்பாட்டில் தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது என்று சென்னையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் மகாராஷ்டிர வீட்டு வசதி வாரியத்துறை அமைச்சர் திரு. வி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

பம்பாயில் வசிக்கும் மக்களில் பாதிப்பேர் குடிசை வாசிகளாகவே இருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

## 3 வருடங்களின் பின் எகிப்து மந்திரி இஸ்ரேல் விஜயம்!

(டெல் அவிவ்)

எகிப்தின் எண்ணெய் வளத்துறை அமைச்சர் இஸ்ரேலுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார்

எகிப்திய ஜனாதிபதி முபாரக்கின் விசேட செய்தி ஒன்றையும் அவர் இஸ்ரேலியப் பிரதம மந்திரி திரு. பெரஸிடம் கையளித்தார்.

எகிப்திய அமைச்சர் ஒருவர் மூன்று வருடங்களுக்குப் பின் இஸ்ரேலுக்கு விஜயம்செய்வது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## 63 இலட்சம் ரூபா தங்கம்: சிங்கப்பூர் பிரஜை சிக்கினார்

(சென்னை)

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அறுபத்து மூன்று இலட்சம் ரூபா பெறுமதிமிக்க இருபத்து எட்டுத் தங்கக் கட்டிகளை சுங்க இலாகா அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைதான சிங்கப்பூர் பிரஜை அவற்றை ரெடிமேட் ஆடைகளுக்குள் மறைத்து வைத்திருந்தாராம்.

இரகசியத் தகவல் ஒன்றையடுத்துக் கைது செய்யப்பட்ட அவர் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## ராஜினாமா வாபஸ்?

(அமிர்தசரஸ்)

அகாலிதள் தலைமைப் பதவியிலிருந்து விலகிய லோங்கோவால் தனது ராஜினாமாவை வாபஸ் பெற்றுக் கொள்ள விரும்புவதாகக் கூறப்படுகிறது.

## கோரிக்கை

(சிம்லா)

பஞ்சாப் பிரச்சினைத் தீர்வுக்கான நிலையைத் துரிதப்படுத்துமாறு ஜனதாக் கட்சித் தலைவர் திரு சந்திரசேகர் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஈழமுரசு

## கண்டெடுத்த அடையாள அட்டைகள் கொழும்புக்குச் செல்லவுள்ளன!

வடபகுதியில் கண்டெடுக்கப்பட்டு யாழ் ஆட்பதிவு திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்ட பெருந்தொகையான அடையாள அட்டைகளை கொழும்புக்கு அனுப்பிவைக்கும்படி மேலிடத்து உத்தரவு யாழ் கச்சேரியிலுள்ள இத்திணைக்களத்துக்கு கிடைத்துள்ளது. இந்த அடையாள அட்டைகளில் சிலவற்றை மட்டுமே தவறவிட்டோர் பெற்றுக்கொண்டனர். ஈழமுரசு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்ட அடையாள அட்டைகளும் இதில் அடங்கும் இதேவேளை பாடசாலைகளிலும், கிராமசேவகர்களிடமும் உள்ள அடையாள அட்டை சம்பந்தமான படிவங்கள் இதுவரை இத்திணைக்களத்துக்கு அனுப்பப்படாததினால், புதிய படிவங்களை மேலிடத்தில் இருந்து பெற்றுக் கொள்ள முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

### நெடுந்தீவில் படகில் வந்தவரா?

# எழுவைதீவில் ஒதுங்கிய சடலம் அடையாளம் காணப்படாமலே அடக்கம்

(ஊர்காவற்றுறை)

எழுவைதீவு கடற்கரையில் ஒதுங்கிய சடலம் ஒன்றை எழுவைதீவு பொதுமக்கள் அடக்கம் செய்தள்ளனர். இச் சடலம் நெடுந்தீவில் இருந்து புறப்பட்ட 'குமுதினி' படகில் அண்மையில் மரணமானவர்களில் ஒருவராக இருக்கலாமென்று கூறப்படுகின்றது.

இச்சடலம் கடந்த பதினேழாம் திகதி கரை ஒதுங்கியது எனவும், 35-40 வயதிற்குட்பட்ட ஓர் ஆணினுடையது என்றும், தடித்த உருவம் கொண்டவராகவும் அரையில் மாட்டுக் கொம்பிற்குக் கட்டும் சங்கிலியும், நீல நிற உள்ளங்கியும் அணிந்திருந்ததுடன் சடலத்தின் பிடரியில் பலத்த கொத்துக் காயம் ஒன்றும் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கரை ஒதுங்கியவுடன் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்த போதும் இடையில் 'கடற் சோதனைக்காரரின்' பயமுறுத்தலினால் அந் நடவடிக்கை கைவிடப்பட்டது.

அப்பகுதி மக்கள் இச்சடலத்தைப் புகைப்படம் எடுத்து வைத்துள்ளனர். இச் சடலம் கரை ஒதுங்கிய அதேவேளை, அடையாள அட்டை ஒன்றும் கூடவே மிதந்து வந்ததாம். ஆனால், அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையெனவும் கூறுகின்றனர்.

### காணிப் பதிவக....

...1ஆம் பக்கத் தொடர்

சகல உறுதிகளும், மற்றும் பிரதிகளும் கவனமாக எடுத்துச் செல்லப்பட்டு யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தின் ஒரு பகுதியில் வைக்கப்பட்டுள்ளன; யாழ்ப்பாண மக்களின் பெறுமதிமிக்க இந்த ஆவணங்களைப் பாதுகாப்பதற்கு அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம் என்று அதிகாரிகள் கருதுகின்றனர்.

உறுதிகளை கோட்டைக்கு வெளியே எடுத்துவந்ததால் சட்டத்தரணிகளும், பொது மக்களும் பெரும் நன்மை அடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பொறியியலாளரை....

...1ஆம் பக்கத் தொடர்

இவர் அபாயகரமான நிலையில் அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க அரசாங்கத்தின் விசாரணை கேட்கும் வேண்டுகோளை இலங்கையிலுள்ள அமெரிக்க தூதர் ஜோன் ரீட், இலங்கை அரசிடம் தெரிவித்துள்ளார்.

### இன்று முதல்....

...1ஆம் பக்கத் தொடர்

மாக நான்கு சேவைகள் நடாத்தப்படவுள்ளன. அவை புன்னாலைக்கட்டுவன், உரும்பராய், வசாவிளான், திருநெல்வேலி ஆகிய இடங்களுக்கான சேவைகளாகும்.

### படகுச் சேவை ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

காரைநகர் கடற்படை முகாம் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து முற்றாக நிறுத்தப்பட்ட அனலைதீவு-ஊர்காவற்றுறை என்பவற்றிற்கிடையேயான படகுச் சேவை கடற்படை முகாம் பொறுப்பதிகாரி கொடுத்த வாக்குறுதியின் பேரில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதே சமயத்தில் காரைநகர் - ஊர்காவற்றுறை என்பவற்றிற்கிடையிலான சிறிய படகுச் சேவையும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### ஜே. ஆர். ராஜீவ்...

—1ஆம் பக்கத் தொடர்

கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. எனினும் இதனை இந்திய வெளிவிவகார அமைச்சு ஊர்ஜிதம் செய்யவில்லை.

கொழும்பு வந்திருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. ரமேஷ் பண்டாரி இன்று ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேசிய பின்னரே 'உச்சி மகாநாட்டுக்கான' திகதியும், இடமும் நிச்சயப்படுத்தப் படுமென்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி ஆகக் கூடியது இரண்டு தினங்களை மட்டுமே பாரதத்தில் செலவழிப்பாரென்றும், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தமது திட்டங்களை ரமேஷ் பண்டாரி மூலம் இந்தியப் பிரதமருக்கு அறிவிப்பாரென்றும் அதே வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

### 3 லொறிகள்...

—1ஆம் பக்கத் தொடர்

மாவட்டத்திலுள்ள முக்கிய பாதையொன்றில் வைத்து தீக்கிரையாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஞாயிறு, திங்கள்...

—1ஆம் பக்கத் தொடர்

ஞாயிறு இரவு கூட்டுத்தாபனத்தில் ஜீப், ட்ராக்டர் ஆகிய இரண்டு வாகனங்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன;

திங்கட்கிழமை இரவு பெறுமதி வாய்ந்த நான்கு மோட்டர்கள், அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகள், மற்றும் பலபொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

ஏற்கனவே நடைபெற்ற பல கொள்ளைகள் காரணத்தால் மேற்படி தொழிற்சாலையின் உற்பத்தி வேலைகள் நிறுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### மூன்று வாரமாக மூடப்பட்டிருந்த

## பருத்தித்துறை தபாலகம் வேறிடத்தில் இயங்குகிறது

(புலோலி)

மூடப்பட்டிருந்த பருத்தித்துறை தபால் நிலையம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை இராணுவ முகாமிற்கு அருகாமையில் இது வரை இயங்கி வந்த பருத்தித்துறை தபால் நிலையம் தற்பொழுது பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு முன்னால் உள்ள தனியார் கட்டிடமொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறை தபால் நிலையத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் தங்களது பாதுகாப்பு கருதி கடமைக்குச் செல்லாமலிருந்ததையடுத்து சுமார் மூன்று வார காலமாகப் பருத்தித்துறை தபால் நிலையம் மூடப்பட்டிருந்தது.

யாழ். தபால் அத்தியட்சகர் பருத்தித்துறை தபால் அதிபர் ஆகியோரின் முயற்சியைத் தொடர்ந்து இத் தபால் நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டு திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

### முஸ்லிம் இளைஞர் தாக்கப்பட்டு மரணம்

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தைச் சேர்ந்த இத்த சுவாதீனமற்றவரான ஜெய்னுலாப்தின் ஜமீன் என்ற இளைஞர், இயக்கமொன்றினால் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டதால் மரணமானதை வன்மையாகக் கண்டித்து யாழ் இஸ்லாமிய மக்கள் பாதுகாப்பு அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

### சாராயம் கொள்ளை

(குருநகர்)

நேற்று மாலை நான்கு மணியளவில் குருநகர் அரச வடிசாலைக் கூட்டுத்தாபனக் குதத்திற்கு லொறி ஒன்றில் வந்திருந்த ஆயுதபாணிகளான இனந்தெரியாத பத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தரை பயமுறுத்தி அங்கு எஞ்சியிருந்த சிறு தொகை முதல்தரச் சாராயப் போத்தல்களையும் தட்டச்சு இயந்திரத்தையும் தொலைபேசியையும் எடுத்துச் சென்றனராம்.

### சந்திப்பு

இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்று மாலை பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸவை பிரதமரின் அலுவலகத்தில் சந்தித்து உரையாடினார்.

### பாதுகாப்பு

கொழும்பிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் நேற்று பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. வடபகுதித் தீவிரவாதிகள் பாடசாலைகளில் தாக்குதலை மேற்கொள்ளலாம் என்று பரவிய வதந்திகளையடுத்தே இவ்வாறு பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

### ஏன் இந்தப் பாகுபாடு?

(மாவிட்டபுரம்)

யாழ்வளாக நுண்கலைப்பீட டிப்ளோமா பயிற்சிநெறி ஆசிரியர்களுக்கு தயாரத்னா குழு கடந்த ஜனவரி மாதம் முதல் சம்பள உயர்வு வழங்க சிபார்சு செய்திருந்தும், அவ் ஆசிரியர்களுக்கு இதுவரை அச்சம்பள உயர்வு வழங்கப்படவில்லை; சம்பந்தப்பட்ட அவ் ஆசிரியர்கள் இதுபற்றி விசாரிக்க தத்தமது கல்வித்திணைக்களங்களுக்குச் சென்றால் தமக்கு புதிய சம்பளமாற்ற விபரங்கள் கல்வியமைச்சால் இதுவரை அனுப்பப்படவில்லை யென கைவிரிக்கிறார்களாம்.


தரமான

தங்க - வைர நகைகளை

எண்ணம்போல்

தெரிவுசெய்ய

யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்

(வின்ஸர் தியேட்டருக்கு முன்)

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


## மரண அறிவித்தல்

### திருமதி லீலா ஞானபூரணம்

திருமதி லீலா ஞானபூரணம் ஞானராஜா காலமானார்; இவர் காலஞ் சென்ற R. A. ஞானராஜாவின் (SALTERN - உப்பளம்) அன்பு மனைவியும், தங்காவின் அன்புத் தாயாரும், சிவராஜாவின் (LONDON) அன்பு மாமியாரும், அகிலாவின் அருமைப் பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 28-05-1985-ல் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

திருமதி தங்கா சிவராஜா

## மரண அறிவித்தல்

### சி. இரங்கநாதன்

உசன், மிருசுவிலைச் சேர்ந்த இரங்கநாதன் காலமானார். இவர் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மகனும் - இராச பூபதியின் அன்புக் கணவரும், ரவிசங்கர் (St. Johns College, Jaffna) ஜெய்சங்கர் (Jaffna Hindu College) பிரபாசங்கர், இரவிச் சந்திரிகா, சிவசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் 29-5-85 புதன்கிழமை 3 மணிக்கு இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டிவீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 29-5-85 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336.